## செய்தி வெளியீடு–28.6.2008

## 1500 கோடி ரூபாய் முதலீட்டில் கோவை மாவட்டம் பல்லடத்தில் காற்றாலை கியர்பாக்ஸ் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த, 'ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனம்' மோட்டார் வாகன பயன்பாட்டுக்கு அல்லாத கியர் பாக்ஸ்களைத் தயாரிப்பதில் உலக அளவில் புகழ் பெற்றுள்ள இரண்டாவது பெரிய நிறுவனம். அதன் துணை நிறுவனமாக இந்தியாவில் செயல்படுவது ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனமாகும். காற்றாலை பயன்பாடுகளுக்கான மின்கடத்தி கியர் பாக்ஸ்களை வடிவமைத்து, உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் நிறுவனங்களுள் இந்நிறுவனம் முதன்மையானதாகும். இந்நிறுவனம் கோவை மாவட்டம் பல்லடம் வட்டம், கருமத்தம்பட்டி மற்றும் கிட்டாம்பாளையம் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள சுஸ்லான் உள்கட்டமைப்பு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் காற்றாலை கியர்பாக்ஸ்கள் தயாரிக்கும் தொழிற்சாலையினைச் சிறப்புப் பொருளாதார மண்டல அமைப்பில் ஏற்படுத்திடத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலையின்மூலம் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனம் ஐந்தாண்டு கால அளவில் 1500 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகளைச் செய்யும்; ஏறத்தாழ 800 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 200 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் அளிக்கும்.

தமிழகத்தில் சென்னைக்கு அப்பால், தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியான பல்லடம் வட்டத்தின் பொருளாதார நிலை மேம்படவும், மரபுசாரா எரிசக்தி உற்பத்திக்கான முதலீடுகளை ஈர்ப்பதில் இப்பகுதி பெற்றுள்ள முன்னேற்றங்கள் மேலும் வலுப்பெறவும் உதவும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்தப் புதிய தொழிற்சாலை நிறுவப்படுவதற்கான, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழக அரசின் சார்பாக, தொழில்துறைச் செயலாளர், திரு.எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., அவர்களும், ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் சார்பாக ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திரு. இவன்ப்ரம்ஸ் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., மற்றும் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் மூத்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

***